## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பதவிநிலைக் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பதவிநிலைக் கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பதவிநிலைக் கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.3 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கல்லூரியின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கல்லூரியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பதவிநிலைக் கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பதவிநிலைக் கல்லூரியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.4 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்கீட்டு நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது அச்சொத்துக்கள் உரித்தாகும் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் வாகனங்கள், தளபாட உபகரணங்கள் கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் போன்ற சொத்து வகுப்புக்கள் தொடர்பான மீள்மதிப்பீட்டின் போது தெரிவு செய்யப்பட்ட சொத்துக்கள் சில மாத்திரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஏனைய சொத்துக்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 செப்தம்பர் முதல் மதிப்பீட்டு திணைக்களத்தின் உததியோகத்தர்களால் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வரவதுடன் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத வகையில் குறித்த சொத்துக்கள் வகுப்பையும் ஒரே தடவையில் மீள்மதிப்பீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட பதவிநிலைக் கல்லூரியின் மொத்த சொத்துக்கள் பெறுமதி ரூபா 1,349,210,943 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,336,590,911 என காண்பிக்கப்பட்டிருந்தது, | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பதிவேட்டில் மேற் கொள்ளப்பட்ட மாற்றங்கள் சரியாக நாளதுவரையாக்காமை வேறுபாட்டிற்கு காரணங்களாக இருந்தன | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்குவது அவசியமாகும். |
| (ஆ) | 2010-2017 காலப்பகுதிக்காக ரூபா 1,639,200 கூட்டுத்தொகையான கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பாக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்வதற்கோ அல்லது கட்டணங்களை தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பாக 2019 சனவரி 05 ஆந் திகதி வரையிலும் தகவல்கள் கிடைக்காதிருந்ததுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் இணக்கப்பாட்டின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுமென. | ஆண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்பட வேண்டிய செலவினங்கள் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு உட்படுத்தாமல் நிதிக்கூற்றுக்களில் சரியானதென உறுதியாகின்றது. |

## 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவிநிலைக் கல்லூரியால் இலங்கை தரைப்படைக்குச் செலுத்த வேண்டிய ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 10,992,853 ஆன கடன் மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு தேவையான அனுமதி கோரப்பட்டுள்ளது. | நீண்டகால கடன்மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் பதவிநிலைக் கல்லூரியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,492,910 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் ரூபா 4,667,249 பற்றாக்குறை ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,825,661 தொகையான வீழ்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 4,540,447 ஆல் குறைவடைந்திருந்த போதிலும் வருமானம் ரூபா 7,270,512 ஆல் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிகிற்கு பிரதானமாக காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டு தவிர 2012 ஆம் ஆண்டு முதல் 2018 வரையான காலப்பகுதியில் நிதி விளைவுகளில் பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்ந்தும் தளம்பலடைந்து காணப்பட்டன. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொண்டதன் பின்னர் பதவிநிலைக் கல்லூரியின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் ரூபா 21,327,028 ஆக இருந்ததுடன், அப்பெறுமதி 2018 ஆம் ஆண்டு வரையில் ரூபா 40,341,225 வரை படிப்படியாக அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவி நிலைக் கல்லூரியால் மீளாய்வாண்டில் பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 ஏற்பாடுகளுக்கு முரணாக நிழற்பிரதி இயந்திரமொன்று, கூடாரமொன்று, கட்டிட பொருட்கள் போன்ற மூலதனச் சொத்துக்கள் கொள்வனவிற்காக ரூபா ரூபா 6,619,998 தொகையும் மோட்டார் வாகன திருத்தங்கள், மின் உபகரணங்கள் திருத்தங்கள் போன்ற மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 11,617,870 தொகை கல்லூரி தாபன தலைவரின் கணக்கின் மூலம் செலவிடப்பட்டு பின்னர் மீளளிக்கப்பட்டிருந்தது. பிரகாரம் | பொருட்கள் மிகவும் உயர்தரமான மற்றும் தரமான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வும் வியாபாரக் கண்காட்சி நிகழ்ச்சிகளில் இருந்து குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவே கல்லூரி தாபன தலைவரின் கணக்கின் மூலம் செலவிடப்பட்டு மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுவதால் கல்லூரியின் அனைத்து நிலைகளின் நலன்புரி செயற்பாடுகளுக்காக கல்லூரியிடமிருந்து மீளளிப்பு அடிப்படையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்வதால் நிறுவன பெறுகை செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |

## 3.2 ஏனைய அமைப்புக்களுக்குரிய வளங்களை பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டின் போது கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருந்த இளைஞர் சேவை மன்றத்திற்குரிய ஹெயியன்துடுவ பிரதேசத்தில் உள்ள 11 ஏக்கர் அளவிலான காணி மற்றும் கல்லூரியின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு அமைச்சிற்குரிய ரூபா 2,100,000 மீள் மதிப்பீட்டு பெறுமதியான பஸ் வண்டி மற்றும் தரைப் படையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 19,875,000 கிரயமான ஏனைய 13 வாகனங்கள் என்பவற்றை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பதவிநிலைக் கல்லூரிக்கு சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்குரிய ஹெயியன்துடுவ தோட்டத்தை பதவிநிலைக் கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல்லூரிக்குரிய காணியின் உரித்தினை உறுதிப்படுத்தி பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கும் பாதுகாப்பு அமைச்சிற்கும் தரைப்படைக்கும் சொந்தமான வாகனங்களை கல்லூரிக்கு பொறுப்பேற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3. பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இன் 5 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தரைப்படை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகளுக்காக அவர்களுக்குத் தேவையான தொழில்துறை அறிவினை வழங்குதல் மற்றும் கல்லூரியில் பயிற்சி பெறும் உத்தியோகத்தர்களின் கட்டளை மற்றும் பதவிநிலை செயற்பாடு ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்காக தயார்படுத்தல் கல்லூரியின் அடிப்படை நோக்கங்களாகும். மீளாய்வாண்டின் போது கல்லூரியினால் நடாத்தப்பட்டிருந்த பட்டப்படிப்பு பாடநெறிகளை 140 மாணவர்கள் பூர்த்தி செய்திருந்ததுடன் ஒரு மாணவருக்காக ரூபா 2,671,433 கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.மேலும் | கணக்காளர் உள்ளகக் கணக்காய்வு மற்றும் சிவில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக நியமிக்கப்படுமாறு பல சந்தர்ப்பங்களில் வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. இப் பதவிக்காக நேரடி ஆட்சேர்ப்பு செய்யக்கூடிய வகையில் இக் கல்லூரியின் சட்டத்தை திருத்தம் செய்வது தற்போது நடைபெற்று வருகின்றது. | பல்கலைக்கழகத்தின் நோக்கம் மனித வள முகாமைத்துவ அபிவிருத்தி செய்வதாக இருப்பதால் பட்டப்படிப்பு பாடநெறியின் தரத்தைப் பாதுகாப்பதற்காக கல்விசார் பதவியணியினரை ஆட்சேர்ப்பது அவசியமாகும். |

சட்டத்தின் பிரகாரம் மேலும் சட்டத்தின் பிரகாரம் பதவிநிகைக் கல்லூரியின் செயற்திறனான செயற்பாட்டிற்காக தேவையான பேராசிரியர் பதவி, விரிவுரையாளர் பதவி மற்றும் ஏனைய பதவிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கல்விசார் பதவியணியின் அந்த உயர் பதவிகளுக்காக நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
அவ்வாறே கல்லூரிக்காக உள்ளகக் கணக்காய்வாளரொருவர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரொருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவிநிலைக் கல்லூரியில் நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு அமைச்சின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 399,111,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 36,264,272 ஆன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,309,616 தொகைக்காக பொறுப்புக்களாக தீர்வுசெய்ய வேண்டியிருந்தது. | மீண்டெழும் செலவினத்திற்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டை விட பொறுப்புக்கள் உட்படுத்தப் படாதிருந்ததுடன் அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் இந்நிதி ஏற்பாட்டை மிகைத்து செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>நூலகம் மற்றும் பரீட்சை மண்டப தொகுதி கட்டிட நிர்மாணத்தின் போது இடம்பெற்ற ஒப்பந்த விலகல் காரணமாக இவ்வாறு ரூபா 5,959,010 ஆன நிதிஏற்பாட்டை மிகைத்து செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நி.பி 94 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு இல்லாதிருந்தால் அல்லது எவ்வித செலவினமொன்றுக்கு கடப்பாடொன்றிற்காக பொறுப்பாக கூடாது. |